**மே – 22**

# TNPSC துளிகள்

- அஞ்சல் துறையானது, கொடைக்கானல் சூரிய ஆய்வகத்தின் (KSO) 125 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் ஒரு நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டு உள்ளது.
- ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ராவின் கையொப்பத்துடன் கூடிய மகாத்மா காந்தி உருவம் பதித்த பணத் தாள் தொடரில் 20 ரூபாய் மதிப்புள்ள புதிய ரூபாய்த் தாள்களை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட உள்ளது.
- இராஜஸ்தானின் சமையல் வகையில் சாங்க்ரி எனும் ஒரு தனித்துவமான சுவையைச் சேர்க்கும் மெல்லிய பீன்/அவரை வகைக்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வருடாந்திர கடன் வழங்கீட்டுத் திட்டம் 2025-26





- தமிழ்நாட்டில் முன்னுரிமைத் துறைகளுக்கான கடன் வழங்கீட்டுத் திட்டத்தின் கீழ் 9,00,181 கோடி ரூபாய் வருடாந்திர கடன் வழங்கீட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது 2024-25 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டதை விட 21.12% அதிகமாக மதிப்பிடப் பட்டு உள்ளது.
- மாநிலத்தில் 126% என்ற அளவிலான கடன்-வைப்பு விகிதமானது நாட்டிலேயே சிறந்த மதிப்பிலானதாகும்.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி 6,63,993.27 கோடி ரூபாயாக இருந்த முன்னுரிமைத் துறைகளுக்கான முன் தொகையானது, 2025 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி 7,43,194.33 கோடி ரூபாயாக அதிகரித்தன.

## 19 புதிய பயிர் வகைகள்

- கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU) ஆனது, 2025 ஆம் ஆண்டிற்காக வெவ்வேறு வேளாண் பருவநிலை சார்ந்தஓ பகுதிகளுக்கு ஏற்ற 19 புதிய பயிர் வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மூன்று வகையான அரிசி வகைகள், ஒரு கலப்பின மக்காச்சோள வகை, ஒரு உளுந்து வகை, வறட்சியைத் தாங்கும் நிலக்கடலை வகை மற்றும் பகுதியளவு உயரம் கொண்ட குட்டை கலப்பின ஆமணக்கு வகை ஆகியவை இதில் அடங்கும்.

- இந்த மூன்று அரிசி வகைகளானது, பகுதியளவு உயரம் குன்றியதும் வறட்சியைத் தாங்கும் தன்மையுடைய CO59 மற்றும் ADT 56 & ADT 60 ஆகிய இரண்டு நடுத்தர அளவிலான மெல்லிய தானிய வகைகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.
- மக்காச் சோள கலப்பின வகையானது COH(M) 12 என்று அழைக்கப்பட்டது.
- ஒரு உளுந்து வகையான VBN 12 ஆனது பாசனம் மற்றும் நெல் சாகுபடிப் பருவத்தில் பயிரிடப் பட்ட பயிர் எச்சங்களை ஒரு உரமாகக் கொண்டு அதற்கு அடுத்தபடியாக சாகுபடி செய்யப் படும் நிலங்களுக்கு ஏற்றது.
- வறட்சியைத் தாங்கும் நிலக்கடலை வகைக்கு CTD 1 என்றும், பகுதியளவு உயரம் வளரும் குட்டை கலப்பின ஆமணக்கு வகைக்கு YRCH என்றும் பெயரிடப்பட்டது.
- தோட்டக்கலைப் பயிர்களில், காய்கறிப் பயிர்களில் நான்கு வகைகளும், PLR 1 எனப் படும் சிறிய அளவிலான பழ வகையைக் கொண்ட வெண்பூசணி வகையும் அறிமுகப் படுத்தப் பட்டது.
- பழப் பயிர்களில் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று புதிய வகைகளில், தண்டு முறியாதத் தன்மையுடைய, குட்டை ரக வாழை வகையான காவேரி வாமன், அவோகேடோ TKD 2 மற்றும் அமில எலுமிச்சை வகை SNKL 1 ஆகியவை அடங்கும்.
- ஒரு மலர் பயிர் தோவாளை 1 அரளி/நெரியம், ஒரு மசாலா பயிர் (ஜாதிக்காய் PPI 1), ஒரு தேங்காய் பயிர் ALR, மற்றும் ஒரு மருத்துவ பயிர் வகை CO 1 சிறுகுறிஞ்சன் ஆகியவை அறிமுகப் படுத்தப்பட்டன.
- மேலும், சிறந்த ஆயுட்காலம் கொண்ட KKM காளான் வகை அறிமுகப்படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகமானது அதன் வரலாற்றில் கடந்த 100 ஆண்டுகளில் 929 பயிர் வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.





## நாகப்பட்டினத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்வதற்கான ஆய்வு

- தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறையானது, நாகப்பட்டினம் துறைமுக நகரத்தில் அகழ்வாராய்ச்சியைத் தொடங்குவதற்கான பல்வேறு சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து

வருகிறது.

- ❖ முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி 985-1014) காலத்தில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் புகழ்பெற்ற ஒரு புத்த மடாலயமான சூடாமணி விஹாராவின் எஞ்சியப் பகுதிகளைக் கண்டறிவதே இதன் நோக்கமாகும்.
- ❖ இதில் நாகப்பட்டினம் பகுதியானது, தென்னிந்தியாவில் புத்த மதம் நிலைப்பெற்று விளங்கியப் பகுதியாக/புத்த மதத்தின் கோட்டையாக இருந்ததாக நம்பப்படுகிறது.
- ❖ அதன் அருகில் அமைந்துள்ள, முற்கால/ஆரம்பகாலச் சோழர்களின் தலைநகராகவும், பண்டைய துறைமுக நகரமாகவும் விளங்கிய பூம்புகார் ஆனது காவேரிபூம்பட்டினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ மாநில அரசானது இந்த ஆண்டு பூம்புகார் மற்றும் நாகப்பட்டினம் இடையே ஆழ்கடல் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.




சைனா பகோடா (புதுவெளி கோபுரம்)
CHINA PAGODA

பண்டையகாலத்தில் நாகப்பட்டினம் இந்தியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் முக்கியமான துறைமுகமாகத்திகழ்ந்தது. தாலமி "நிகமா" என்றும் இட்சிங் "நாகவதனா" எனவும், மார்கோபோலோ "படன்" எனவும், நாகப்பட்டினத்தை அழைத்தனர். புத்தமத இலக்கியங்கள் நாகப்பட்டினத்தை ஒரு புனிதத்தலமாகவே இயம்புகின்றன. பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் II (கி.பி.690–720) காலத்தில் சீனாவிலிருந்து வணிகம் செய்ய வந்த சீன புத்த மதத்தினர் வழிபட இங்கு புத்தர் கோயில் கட்டப்பட்டது. இப்புத்தர் கோவில் "சீன பகோடா" என்று அழைக்கப்பட்டது. நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் தான் காஞ்சிபுரத்திலிருந்து வஜ்ரபோதி என்னும் புத்த அறிஞர் (கி.பி.661–730) சீனாவிற்கு சென்று "வஜ்ராயனா" என்னும் புத்த மத கோட்பாடுகளை பரப்பினார். அவர் கி.பி.720 ல் சீனாவை சென்று அடைந்தார். அவர் சீன அரசிடம் "மஹாப்ரஞா பாரமிதா" என்னும் நூலை பரிசளித்தார்.

கி.பி.13 நூற்றாண்டில் நாகப்பட்டினத்திற்க்கு வந்திருந்த மார்க்கோ போலோ சீனா பகோடாவை பற்றி பின் வருமாறு கூறுகிறார்.

[illegible]

சர் வால்டர் எலியட் கி.பி. 1867 ல் பின்வருமாறு கூறுகிறார் நாகப்பட்டினம் துறைமுகத்தின் மிக அருகில் வந்து போகும் கலங்களுக்கு இந்த ஸ்தூபம் கலங்கரை விளக்கம் போல விளங்கியது. இதற்கு புதுவெளிக்கோபுரம், பழைய பகோடா மற்றும் சைனா பகோடா என்ற பல பெயர்கள் உண்டு. வேலண்டைன் (கி.பி.1725) ல் இக்கோபுரத்தை "பகூட்சைனா" என்று அழைத்தார்.

இக்கட்டிடத்திற்கு அருகாமையில் கி.பி.1856 ல் ஒரு இலுப்பை மரத்தை வேருடன் வெட்டி எடுக்கையில் தற்செயலாக பூமியில் புதையுண்டிருந்த நான்கு புத்த படிமங்களும் ஒரு சீனக்களிமண் உருவமும் கண்டெடுக்கப்பட்டது.

இந்த சீன பகோடாவை மிகவும் பழுதடைந்த காரணத்தால் கி.பி.1867 ல் அரசின் அனுமதியோடு ஏசு திருச்சபையினரால் இடிக்கப்பட்டது. தற்போது இக்கட்டிடம் இருந்ததற்க்கான எவ்வித அடையாளமில்லை.

# தேசியச் செய்திகள்

## வனசக்தி vs. இந்திய ஒன்றிய அரசு இடையிலான வழக்கு

- ❖ சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தின் (MoEF&CC) 2017 ஆம் ஆண்டு அறிவிப்பை உச்ச நீதிமன்றம் ரத்து செய்து அதனை சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்துள்ளது.
- ❖ அந்த அறிவிப்பானது இந்தத் திட்டங்களுக்கு முன்தேதியிட்ட அனுமதிகளை வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியது.
- ❖ 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், சுற்றுச்சூழல் சார்ந்த செயல்பாடுகளுக்கான முன் அனுமதிக்காக தொழில்துறைகள் விண்ணப்பிப்பதற்கு ஆறு மாத கால அவகாசம் கொண்ட "ஒற்றை" வாய்ப்பினை வழங்கும் அறிவிப்பை MoEF&CC வெளியிட்டது.
- ❖ இந்த முன்தேதியிட்ட அனுமதிகள் சுற்றுச்சூழல் சட்டத்திற்குப் புறம்பானவை என்பதை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக வேண்டி, பொது நலன் Vs இந்திய ஒன்றியம் (2017) இடையிலான வழக்கு மற்றும் அலெம்பிக் பார்மாசூட்டிக்கல்ஸ் Vs ரோஹித் பிரஜாபதி

(2020) இடையிலான வழக்கு ஆகிய இரண்டு முந்தைய வழக்குகளில் வழங்கப்பட்டத் தீர்ப்புகளை நீதிமன்ற அமர்வு குறிப்பிட்டுக் காட்டியது.

**SUPREME COURT BANS RETROSPECTIVE ENVIRONMENTAL CLEARANCES IN INDIA**

*Case Title: Vanashakti vs. Union of India (2025 INSC 718)*

BENCH: Justice Abhay S. Oka & Justice Ujjal Bhuyan

**LEGAL PROVISIONS:**

- Article 21 – Right to life includes right to pollution-free environment
- Article 51A(g) – Fundamental duty to protect environment
- Environment (Protection) Act, 1986
- EIA Notification, 2006

**ANALYSIS:**

- Ex post facto ECs undermine EIA process
- Violates precautionary & sustainable development principles
- Encourages non-compliance and harms public health


**CONCLUSION:**

- 2017 Notification and 2021 OM declared illegal
- Ex post facto ECs banned prospectively
- Already issued ECs upheld
- Central Govt restrained from future similar actions.

**CURRENT SCENARIO:**

- A landmark environmental verdict reinforcing environmental rule of law
- MoEFCC restricted from enabling regularization of illegal project


## மாநிலச் சட்டமன்றங்களின் செயல்திறன் குறித்த அறிக்கை 2024




- ❖ இந்தியாவின் மாநில சட்டமன்றங்களானது சராசரியாக 30 நாட்களுக்கும் மிகக் குறைவாகவே கூடுகின்றன.
- ❖ 2017 ஆம் ஆண்டில் சராசரியாக 28 நாட்கள் சட்டமன்றங்கள் கூடின.
- ❖ பெருந்தொற்று ஏற்பட்ட 2020 ஆம் ஆண்டில் சட்டமன்றங்களின் அமர்வு நாட்களின் எண்ணிக்கை 16 ஆகக் குறைந்துள்ளது.
- ❖ அப்போதிருந்து, இது ஆண்டிற்கு 20 நாட்கள் என்ற எண்ணிக்கைக்கு அருகிலேயே உள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டில் ஒவ்வோர் அமர்வின் சராசரி கால அளவு 5 மணிநேரம் ஆகும்.
- ❖ ஒடிசா மாநிலச் சட்ட மன்றமானது, அதிக நாட்கள் (42 நாட்கள்) கூடியது அதைத் தொடர்ந்து கேரளா (38) மாநில சட்டமன்றம் உள்ளது.
- ❖ பெரிய மாநிலங்களில், உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் மாநிலச் சட்டமன்றங்கள் தலா 16 நாட்கள் கூடின.

- 2024 ஆம் ஆண்டில், மாநிலச் சட்டமன்றங்கள் சராசரியாக ஏழு நாட்களுக்கு நிதிநிலை ஒதுக்கீடுகள் குறித்து விவாதித்தன.
- 2017 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், கேரள சட்ட மன்றம் சராசரியாக 44 நாட்களும், அதைத் தொடர்ந்து ஒடிசா (40) மற்றும் கர்நாடகா (34) ஆகிய மாநிலச் சட்டமன்றங்களும் கூடின.
- அரசியலமைப்பின் 178வது சரத்து ஆனது, சட்டமன்றங்கள் சபாநாயகராகவும் துணை சபாநாயகராகவும் இரண்டு உறுப்பினர்களை விரைவில் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறுகிறது.
- இருப்பினும், ஜார்க்கண்ட் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அவ்வாறு ஒரு அவைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கவில்லை.
- கூடுதாக, 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மக்களவைக்கும் துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.
- மசோதாக்களைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டில் மாநிலச் சட்டமன்றங்கள் சராசரியாக 17 மசோதாக்களை நிறைவேற்றின.
- நிறைவேற்றப்பட்ட 500க்கும் மேற்பட்ட மசோதாக்களில், கர்நாடகா அதிகபட்சமான (49) மசோதாக்களை நிறைவேற்றியது, அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (45) அதிக மசோதாக்களை நிறைவேற்றியது.
- டெல்லி ஒரு மசோதாவை மட்டுமே நிறைவேற்றியுள்ளது அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் 2 மசோதாக்களை நிறைவேற்றியது.
- நிறைவேற்றப்பட்ட அனைத்து மசோதாக்களில் ஐம்பத்தொரு சதவீதம் அல்லது சுமார் 250க்கும் மேற்பட்டவை அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள் நிறைவேற்றப்பட்டன.
- எட்டு மாநிலச் சட்ட மன்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள் அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்றின.

## அனைத்து உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் முழு ஓய்வூதியம்




- கூடுதல் நீதிபதிகளாக ஓய்வு பெற்றவர்கள் உட்பட அனைத்து உயர் நீதிமன்ற நீதிபதிகளும் முழு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியச் சலுகைகளுக்கு என முழு உரிமை பெறுவார்கள் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- வெவ்வெறு தீர்ப்புகளில் வழங்கப்பட்ட ஓய்வு மற்றும் ஓய்வூதியச் சலுகைகளின் மாறு பட்ட தரநிலைகள் அரசியலமைப்பின் 14வது சரத்தின் கீழ் ஒரு சமத்துவ உரிமையை மீறுகிறது எனவும் கூறியுள்ளது.
- ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள், எந்த அடிப்படையில் பதவி பெற்றிருந்தாலும் அனைவருக்கும் 'ஒரு பதவி-ஒரு ஓய்வூதியம்' என்ற கொள்கையை பின்பற்ற வேண்டும்


என்று உச்ச நீதிமன்றம் அரசாங்கத்திற்கு அறிவுறுத்துகிறது.

- ஓய்வுபெற்ற உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கு மத்திய அரசு ஆண்டிற்கு 15 லட்சம் ரூபாய் மதிப்பிலான முழு ஓய்வூதியத்தைத் தனித்தனியாக வழங்கும்.
- உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளாக ஓய்வு பெறாத உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அரசாங்கம் ஆண்டிற்கு 13.5 லட்சம் ரூபாய் மதிப்பிலான முழு ஓய்வூதியத்தை வழங்க வேண்டும்.
- ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளில், உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளும் அடங்குவர்.

# சர்வதேசச் செய்திகள்

## கிதியோன்ஸ் சேரியாட்ஸ் நடவடிக்கை

- கிதியோன்ஸ் சேரியாட்ஸ் நடவடிக்கை என்பது காசா பகுதியில் இஸ்ரேல் தொடங்கிய ஒரு பெரிய தரைவழித் தாக்குதல் நடவடிக்கையாகும்.
- இது காசா பகுதியில் "பெரும் நடவடிக்கை சார்ந்த கட்டுப்பாட்டை" விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஹமாஸ் தற்போது சுமார் 57 பணயக் கைதிகளைத் தன்வசம் வைத்திருப்பதாக நம்பப் படுகிறது, அவர்களில் 22 பேர் உயிருடன் இருப்பதாக கருதப்படுகிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## PSLV-C61 திட்டம்

- மேம்படுத்தப் பட்ட EOS-09 புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை சுற்றுப்பாதையில்

நிலை நிறுத்துவதற்காக என்று விண்ணில் ஏவப்பட்ட இந்தியாவின் PSLV-C61 திட்டம் சமீபத்தில் தோல்வியடைந்தது.

- PS3 கலம் ஏவப்படும் போது விசையியக்கியினுடைய திடநிலைக் கட்டத்தில் சிக்கல்கள் ஏற்பட்டன.
- PS3 கட்டத்தில் ஹைட்ராக்சில் பிணைப்பு முறிக்கப்பட்டப் பாலிபியூட்டாடையீன் (HTPB) எரிபொருள் பயன்படுத்தப்பட்டது.
- EOS-09 செயற்கைக்கோள் ஆனது, C-கற்றை சிந்தெட்டிக் அப்பெர்சர் என்ற ரேடாரைப் பயன்படுத்தி அனைத்து வானிலை கண்காணிப்புக்காக வடிவமைக்கப்பட்டது.
- அதன் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட சுமார் 525 கிலோ மீட்டர் தொலைவிலான சூரிய ஒத்திசைவு சுற்றுப் பாதையை அது அடையத் தவறியது.
- இது PSLV ஏவுகலத்தின் 63 ஏவுதல்களில் அதன் மூன்றாவது தோல்வியையும் 2017 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான முதல் ஏவுகலத் தோல்வியையும் குறிக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## ஷிருய் லில்லி விழா





- ஷிருய் லில்லி திருவிழாவானது மணிப்பூரில் கொண்டாடப்படும் ஒரு வருடாந்திரக் கலாச்சார நிகழ்வாகும்.
- இது அரிய மற்றும் அருகி வரும் ஷிருய் லில்லி (லிலியம் மேக்லினியா) மலருக்காக

அர்ப்பணிக்கப்பட்ட திருவிழாவாகும்.

- ❖ இந்த மலரினமானது, உக்ருல் மாவட்டத்தின் ஷிருய் மலைகளில் மட்டுமே வளர்கிறது.
- ❖ முதன்முதலில் 1946 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மலர் ஆனது 1950 ஆம் ஆண்டு இலண்டன் மலர் கண்காட்சியில் உலகளாவிய அங்கீகாரத்தினைப் பெற்றது.

# இதரச் செய்திகள்

## மெட்ராஸ் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் தேர்வு




- ❖ தலைமை நீதிபதிகள் D.Y. சந்திரசூட் மற்றும் சஞ்சீவ் கன்னா ஆகியோரின் பதவிக் காலத்தில், அவர்கள் மொத்தம் 17 நீதிபதிகளில் BC, OBC, MBC, SC, அல்லது ST சமூகங்களைச் சேர்ந்த 15 பேரை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளாக நியமித்தனர்.
- ❖ நியமிக்கப்பட்ட 34 பெண்களில், பலர் BC, OBC, MBC, SC அல்லது ST சமூகங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- ❖ சென்னை உயர்நீதிமன்றத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த (BC) ஒருவர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த (MBC) ஒருவர் மற்றும் இதரப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினைச் சேர்ந்த (OBC) சேர்ந்த மூன்று பேர் உட்பட 5 பெண்கள் நியமிக்கப் பட்டனர்.
- ❖ தெலுங்கானா, கேரளா, ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், கௌஹாத்தி மற்றும் மணிப்பூர் போன்ற மாநிலங்களில் பல்வேறு பொதுப் பிரிவு சாராத குழுக்களைச் சேர்ந்த பெண்கள் நீதிபதிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- ❖ ஆந்திரப் பிரதேச மாநில உயர் நீதிமன்றத்தின் நியமனத்தில் பொதுப் பிரிவு சாராத பிரிவுகளைச் சேர்ந்த நியமனம் 27.3% பங்கைக் கொண்டுள்ளது என்பதோடு இது 24.4% என்ற தேசிய சராசரியை விட அதிகமாகும்.
- ❖ தென் மாநிலங்களில் பொதுப் பிரிவு சாராதப் பிரிவுகளைச் சேர்ந்தத் தனிநபர்களின் பிரதிநிதித்துவம் ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்தது.
- ❖ கேரளாவில் மட்டும், அங்கீகரிக்கப்பட்ட நியமனதாரர்களில் சுமார் 20 சதவீதத்திற்கும் குறைவானவர்கள் பொதுப் பிரிவு சாராத பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

- இதற்கு மிகவும் நேர்மாறாக, கொல்கத்தா, டெல்லி, ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், மேகாலயா, ஒரிசா, பஞ்சாப் மற்றும் ஹரியானா, பாட்னா மற்றும் திரிபுரா ஆகிய ஒன்பது உயர் நீதிமன்றங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து நியமனதாரர்களும் பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- குஜராத், உத்தரகாண்ட் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில், பொதுப் பிரிவு சாராத பிரிவுகளைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட நியமனதாரர்களின் பங்கு சுமார் 17 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.
- இந்தியாவின் OBC மக்கள்தொகையில் 12.2 சதவீதத்திற்கும் அதிகமான நபர்களைக் கொண்ட பீகார், உயர்கல்வியில் சேரும் நாடு முழுவதுமுள்ள OBC பிரிவினரின் பங்கில் 8 சதவீதத்திற்கும் குறைவான பங்கினை மட்டுமே கொண்டுள்ளது.
- இந்தியாவின் OBC மக்கள்தொகையில் சுமார் 10% பேர் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர் இது தேசிய அளவில் உயர்கல்வியில் சேரும் 13% OBC நபர்களைக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★